# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

# மகிமையால் நிறைந்த மான்மினின் 34வது ஆண்டுவிழா

## 20 நாடுகளிலிருந்து வந்த கனத்திற்குரிய விருந்தினர்களுடன் கொண்டாடப்பட்டது




தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ (படம் 1) மான்மின் சபைக்கு ஏறத்தாழ 11,000 கிளை மற்றும் ஒருங்கிணைந்த சபைகளை தந்து ஆசீர்வதித்த தேவனுக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்தினார். கொரியா மற்றும் மற்ற நாடுகளிலிருந்து வந்திருந்த விருந்தினர்கள் (படம் 6, 7, 8). பரலோகத்தின் அழகை வெளிப்படுத்திய தேவன் தந்த துதிபாடல்கள், இசைக்கருவிகளுடனான கலைநிகழ்ச்சிகள் மற்றும் நடனம் போன்ற கொண்டாட்ட நிகழ்ச்சிகள் மூலமாக மக்கள் மிகுந்த சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் அடைந்தனர் (படம் 2, 3, 4). வெளிப்புற நிகழ்வுகள் (படம் 5, 9, 10).

அக்டோபர் 9, 2016ல் மான்மின் தலைமை சபை அதன் 34வது ஆண்டுவிழா ஆராதனையையும், கொண்டாட்ட கலைநிகழ்ச்சிகளையும் நடத்தியது. அவை 170க்கும் மேற்பட்ட நாடுகளில் GCN TV மற்றும் இணையதளம் மூலமாக நேரடியாக ஒளிபரப்பப்பட்டன. அமெரிக்கா, ரஷ்யா, இஸ்ரேல், எகிப்து, இந்தியா, பிரான்சு, ஆஸ்திரேலியா, கொலம்பியா மற்றும் கென்யா உட்பட 20 நாடுகளிலிருந்து வந்த அநேக மக்கள் பங்கு பெற்றனர். பங்காளர்களுக்கு ஆங்கிலம், பிரான்சு, ஸ்பானியம் மற்றும் ரஷியம் உள்பட ஒன்பது மொழிகளில் நேரடியாக மொழி பெயர்ப்பு செய்யப்பட்டன.

தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ வெள்ளி முழு இரவு ஆராதனை, ஞாயிறு காலை ஆராதனை மற்றும் ஞாயிறு மதிய ஆராதனையில் ஆகாய் 2:9ம் வசனத்தின் அடிப்படையில் “மகிமை” என்ற தலைப்பில் செய்தியைப் பிரசங்கித்தார். அவர் இந்தச் செய்திகளின் மூலமாக கடந்த 34 ஆண்டுகளாக தேசிய சுவிசேஷம் மற்றும் உலக ஊழியத்தை செயல்படுத்தி கொண்டுவருகிற மான்மின் சரித்திரத்தை அவர் நினைப்பூட்டினார். அற்புதங்கள், அடையாளங்கள் மற்றும் அதிசயங்களை நிகழ்த்தி சபையோடுகூட இருக்கின்ற தேவனுக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்தினார்.

சபையின் கலைக்குழு தேவன் தந்த பாடல்களோடு “மகிமை” என்ற தலைப்பின்கீழ் தங்களது கொண்டாட்ட கலைநிகழ்ச்சிகளை காண்பித்தது. “மகிமையான புதிய எருசலேம்” என்ற துணைத்தலைப்பின்கீழ் அந்தக் கலைநிகழ்ச்சிகள் புதிய எருசலேமிற்குள் செல்பவர்களின் மகிழ்ச்சி மற்றும் சந்தோஷத்தை வெளிப்படுத்தின.

கலைஞர்கள் துதித்து நடனமாடுகையில் முதன்மை திரை, சுவர்கள் மற்றும் சீலிங்கில் 260 டிகிரியில் காட்சிகள் காண்பிக்கப்பட்ட அதேநேரத்தில் நிசி இசைக்குழுவின் நேரடி இசைநிகழ்ச்சி அந்தக் காட்சிகளோடு ஒன்றிணைந்தது. அந்த நிகழ்ச்சிகள் பங்காளர்கள் ஒலி மற்றும் காட்சிரீதியாக புதிய எருசலேமின் ஆச்சரியமான அழகை உணருவதற்கு மிகவும் அழகானவைகளாக இருந்தன; பங்காளர்களும் பரலோகத்திற்கான தங்களது நம்பிக்கையை அதிகரித்துக்கொண்டனர்.

DR காங்கோவைச் சார்ந்த போதகர் தெபோராள் தெரிலா ஜூமா சொன்னது, “மான்மின் தலைமை சபை தேவனுடைய அன்பை காண்பிக்கிறது. நான் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவளாய், பரலோகத்தில் நாம் இருப்பதைப் போல உணர்ந்தேன்.”

ஆஸ்திரேலியாவிலிருந்த வந்திருந்த சகோதரி சிந்தியா மெக்மில்லன், “நான் தூக்கமின்மையால் அவதிப்பட்டு வந்தேன். ஆனால் அறிவர். ஜேராக் லீ அவர்களுடன் கைக்குலுக்கிய பிறகு நான் குணமானேன். அதுமுதற்கொண்டு நன்றாய் தூங்குகிறேன்” என்று சொன்னார்.

Dr. நிக்கோலாய் லுன்சிஸ் சொன்னது, “நான் சபை விசுவாசிகளின் பணிவிடை மற்றும் அன்பினாலும், உயர்தரமான கலைநிகழ்ச்சிகளாலும் ஈர்க்கப்பட்டேன். அவை யாவும் வல்லமையின் வெளிப்பாடாகவும், ஆவிக்குரிய உந்துதல்கள் நிறைந்ததாகவும் இருந்தன.”

சபையின் வெளிப்புறத்தில் வண்ணமயமான பூக்கள், ஒரு மலர் வண்டி, ஒரு மலர் ஊஞ்சல் மற்றும் புதிய எருசலேமின் பரலோக படிக்கட்டுகள் போன்ற படங்கள் நிறைந்த புகைப்படம் எடுப்பதற்கான ஒரு விசேஷித்த மேடை அமைக்கப்பட்டிருந்தது. விசுவாசிகளுக்கான உணவை ஆண்கள், பெண்கள், கானான் மற்றும் இளம் வாலிபர் குழுக்களின் அங்கத்தினர்கள் ஆயத்தம் செய்திருந்தனர். அழைப்பாளர்கள், விசுவாசிகளின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் ஒன்றாய் சேர்ந்து சிறந்த நேரத்தைச் செலவிட்டனர்.

அக்டோபர் 7 அன்று, வெள்ளி முழு இரவு ஆராதனையின் இரண்டாம் பகுதியில் “மகிமை” என்ற தலைப்பிலும் “ஆகாயத்தில் கலியாண விருந்து” என்ற துணைத் தலைப்பின்கீழ் சபையானது அதன் ஆண்டுவிழா துவக்க ஆராதனையின் கொண்டாட்ட நிகழ்ச்சிகளை நடத்தியது. ஆகாயத்தில் தங்களது மணவாளராகிய ஆண்டவரைச் சந்திக்கும்போது அவருடைய மணவாட்டிகளாக தாங்கள் அடையப்போகும் மகிமையை பார்வையாளர்களால் நன்றாய் உணர முடிந்தது.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தில் பானம்பண்ணுதல்

**“அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்... என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது” (யோவான் 6:53-55).**

சரீர வாழ்வை தக்க வைத்துக் கொள்வதற்கு ஒரு நபர் உணவு உண்டு நீரேற்றம் இருக்க தண்ணீர் குடிக்க வேண்டும். தண்ணீர் செரிமானத்திற்கும் ஊட்டசத்துக்களை உறிஞ்சுவதற்கும் சரீரத்திலிருந்து தேவையற்ற கழிவுகளையும் விஷ வஸ்துக்களையும் அகற்றுவதற்கும் துணைபுரிகிறது. அதே மாதிரியான வளர்ச்சி கிரமம் ஆவிக்குரிய ரீதியிலும் அப்பியாசிக்கப் படுகிறது.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஜலத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் பிறந்த பிறகு, நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படியான அதிகாரத்தைப் பெறுகிறோம். அப்போது நாம் நம்முடைய ஆவிக்குரிய வாழ்வை தக்க வைத்துக் கொள்ள மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தில் பானம்பண்ண வேண்டும்.

இன்று, “மனுஷகுமாரனுடைய மாம்சத்தை புசித்தல்” என்ற அர்த்தத்தை தியானிப்போம்.

## 1. ‘மனுஷ குமாரனுடைய மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தில் பானம்பண்ணுதலின்’ முக்கியத்துவம்

மனுஷ குமாரனுடைய மாம்சத்தைப் புசித்தல் என்பதன் அர்த்தம் என்ன? இது ஆவிக்குரிய ரீதியில் நித்திய ஜீவனுக்கு வழிநடத்துகிற மெய்யான போஜனமான இயேசுவின் மாமச்த்தைப் புசிப்பதாகும்.

யோவான் 1:14, “அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபே–றானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.” இயேசுவானவரும்கூட தம்மைதாமே, “நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்” என்று யோவான் 6:51ன் முற்பகுதியில் விவரித்துள்ளார்.

தேவனுடைய வார்த்தையாகிய ஜீவ அப்பம் என்கின்ற மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசித்தல் என்பது இயேசுவை “ஆட்டுக்குட்டிக்கு” இணைக்கிறதற்கு மிகவும் நெருக்கமான தொடர்புடையதாய் இருக்கிறது.

அதைப் புசிப்பதற்கான வழிமுறை யாத்திராகமம் 12 ஆம் அதிகாரத்தில் பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாதிரியின் மூலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக பேசினால், ஆட்டுக்குட்டி அதன் மேய்ப்பருடைய குரலுக்கு மட்டுமே கீழ்ப்படியும். அவைகள் மிகவும் சாந்தமாகவும் மனிதர்களுக்கு ஆதாயம் மட்டுமே கொடுக்கக்கூடியவைகளாகவும் உள்ளன. அதேபோல் தான், தேவனுடைய சித்தத்திற்கு மாத்திரமே கீழ்ப்படிதலில், இயேசுவானவர் மனுகுலத்திற்கு நற்காரியங்களை மட்டுமே தந்துள்ளார். மேலும் சாந்தமான ஆட்டுகுட்டியைப் போல அவர் நமக்காக கிருபாதார பலியானார். ஆட்டுக்குட்டிகளின் மத்தியிலே, ஒரு வயதுக்குட்பட்டதும் குறிப்பாக அவைகள் புணராத காரணத்தால் சுத்தமுள்ளவைகளாகவும் உள்ளவைகள், ஆவிக்குரிய ரீதியில், அவைகள் கறையற்ற பழுதற்ற நம்முடைய இயேசுவானவரைக் குறிக்கிறது.

தலைச்சன்பிள்ளையை அடிக்கிற சங்காரம் எகிப்து முழுவதும் அடித்தபோது, யாத்திராகமம் 12:7–10ல் சொல்லப்பட்டதுபோல, தேவன் இஸ்ரவேலர்களை தங்களுக்காக ஒரு ஆட்டுக்குட்டியை எடுத்து “அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள்இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து” ஆட்டுக்குட்டியை புசிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். தேவனும்கூட இஸ்ரவேல் ஜனங்கள் ஆட்டுக்குட்டியை எவ்வாறு புசிக்க வேண்டும் என்று விரிவான அறிவுரையை இஸ்ரவேல் ஜனங்களுக்கு அளித்தார்.

## 2. ஆட்டுக்குட்டியை புசித்தல்

### 1) பச்சையாயும் தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்ல; ஏகமாய் நெருப்பினால் சுட்டதாய் அதைப் புசிப்பீர்களாக

இங்கு, “நெருப்பு” என்பது பரிசுத்த ஆவியின் அக்கினியை குறிக்கிறது. நாம் தேவனுடைய வார்த்தையைப் பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டினால் புரிந்துகொண்டு போஜனமாக்க வேண்டும் (2பேதுரு 1:20–21). 2 பேதுரு 3:16 பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டினால் நாம் தேவனுடைய வார்த்தையை வியாக்கியானம் செய்யாமல் திரிக்கப்பட்ட முறையில் வியாக்கியானம் செய்தால் அது நம்மை சத்தியத்தை விட்டு விலக்கி நம்மை இறுதியில் அழிவுக்கு வழி நடத்திவிடும் என்று நம்மை எச்சரிக்கிறது.

“தேவனுடைய வார்த்தையை பச்சையாய்” சாப்பிடுதல் என்பது அதில் பதிக்கப்பட்ட ஆவிக்குரிய முக்கியத்துவத்தைப் புரிந்துக் கொள்ளாமல் தேவனுடைய வார்த்தையை எழுத்தின் விளக்கமாகவே எடுத்துக்கொள்வதாகும்.

பச்சையான ஆகாரத்தை சாப்பிடுவது என்பது நம்மை செரிமான கோளாறுகள் அல்லது வயிற்று வலிகளுக்கு நேராக நடத்திவிடும். அதேபோலதான், “தேவனுடைய வார்த்தையை பச்சையாக புசித்தல்” என்பது வேதாகமத்தில் விவேகமற்றதும் தவறான விளக்கங்களுக்கும் வழிநடத்திவிடும்.

உதாரண நிகழ்வாக, இயேசுவானவர் மத்தேயு 6:6ல், “நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப்பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்” என்று நமக்குச் சொல்கிறார். இருப்பினும் நாம் வேதாகமத்தில் விசுவாசத்தின் முற்பிதாக்கள் “அறைவீட்டுக்குள்” ஜெபித்ததாக எங்கும் வாசிக்கவில்லை. இயேசுவானவரும்கூட அறைவீட்டில் ஜெபிக்காமல் தோட்டத்தில் அல்லது ஒதுக்குப்புறமான இடங்களில் தான் ஜெபித்தார். இதன் அர்த்தம் நாம் ஜெபிக்கும்போது உலகத் தேவைகள் மற்றும் கவலைகளால் பீடிக்கப்பட்டு சொன்னதையே திரும்பத் திரும்ப ஜெபத்தில் சொல்லாமல் நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து தேவனோடு நாம் தொடர்புக் கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, ஆட்டுக்குட்டியானது “தண்ணீரில் அடிக்கப்பட்டதாக” புசிக்கப்படக்கூடாது. இது இந்த உலகத்தின் எந்த ஒன்றின் பகுதியையும் தேவனுடைய வார்த்தையோடு கூட்டப்படக்கூடாது என்று நமக்குச் சொல்கிறது. மனிதனுடைய எண்ணங்களும் அவனது அறிவும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கிறது. இந்த உலகின் எந்த ஒரு பெரிய சித்தாந்தமும் பூரணமானதும் அல்ல. தேவனுடைய வார்த்தை இந்த உலகின் எந்த ஒரு அறிவையும் மிஞ்சுகிறதாகவும் அது மாத்திரமே மாறாத நிலைத்திருக்கிற சத்தியமாகவும் இருக்கிறது. இதை மனதில் வைத்து, ஒருவர் இந்த உலகத்தின் அறிவுக்கோ அல்லது தர்க்கங்களுக்கோ சாட்சிபகராமல் பரிசுத்த ஆவியினால் உண்டாகிற வெளிப்பாட்டில் மட்டுமே வேதாகமத்தில் காணப்படுகிற தேவனுடைய வார்த்தைக்கு சாட்சி பகர வேண்டும். பரிசுத்த ஆவியினால் அளிக்கப்பட்ட வார்த்தையின் அறிவின்மூலமாக, விசுவாசிகள் ஜீவனுள்ள தேவனைக் குறித்தும், அவரை அவர்கள் எவ்வாறு சந்திக்க முடியும் என்ற வழிகளைக் குறித்தும், இரட்சிப்புக்கு அவசியமான சரியான மாதிரியான கிறிஸ்தவ வாழ்வைக் குறித்தும் கற்பிக்கப்பட வேண்டும்.

### 2) “அதின் தலையையும் அதின் தொடைகளையும் அதற்குள்ள யாவையும்” ஏகமாய் புசிக்க வேண்டும்

இதன் அர்த்தம் நாம் வேதாகமத்தில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையுள்ள அனைத்து தேவனுடைய வார்த்தையையும் போஜனமாக்க வேண்டும்.

வேதாகமத்தை வாசிக்கும்பொழுது, சிலர் லேவியராகமம் போன்ற கஷ்டமான பகுதிகளை தவிர்ப்பார்கள். வேறு சிலர் வேதாகமத்தில் தெளிவற்று பதிவு செய்யப்பட்டுள்ள அடையாளங்களையும் அற்புதங்களையும் நம்ப தயங்குவார்கள் அல்லது நம்பமாட்டார்கள். தங்கள் எண்ணங்களோடு ஒத்துப்போகாத வேதாகமப் பகுதிகளை மக்கள் அலட்சியம் செய்தால் அல்லது வெட்டி எடுத்து விட்டால் மீந்திருப்பது சத்தியமாகவும் இராது, விசுவாசமாகவும் இராது. நெறிமுறைகள் மற்றும் ஒழுக்கங்கள் மட்டுமே எஞ்சியிருக்கும். இதற்கு மேலாக, அவர்கள் எத்தனை முறைகள் அல்லது அடிக்கடி வேதாகமத்தை வாசித்தாலும் அவர்கள் கைக்கொள்வதற்கு பார்க்க கடினமாயுள்ள தேவனுடைய கட்டளைகளை இருதயத்தில் வைத்திராவிட்டால் அவர்களால் நித்திய ஜீவனை பெற முடியாது.

தேவனுடைய வார்த்தை ஒரு பகுதியாக அல்லது ஒரு பங்காக எடுத்துக்கொள்ளப்படாமல் முழுவதுமாக போஜனமாக்கப்பட வேண்டும். அப்போது, நாம் நித்திய ஜீவனைப் பெறலாம்.

### 3) “அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலம் மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிப்பீர்களாக”

இதன் அர்த்தம் அவர்கள் விடியற்காலம் வருவதற்கு முன்னே அவைகளை சாப்பிட்டுவிட வேண்டும். ஆவிக்குரிய ரீதியில் “இரவு” என்பது இந்த உலகத்தின் மேலே எதிராளியாகிய பிசாசும் சாத்தானும் அதிகாரத்தைப் பிரயோகிக்கிற காலக்கட்டத்தைக் குறிக்கிறது. “விடியற்காலம்” என்பது ஆண்டவர் மறுபடியும் வருகிற காலத்தை அடையாளப்படுத்துகிறது. நாம் மனுஷகுமாரனுடைய மாம்சமாகிய தேவனுடைய வார்த்தை அனைத்தையும் ஆண்டவர் திரும்ப வருவதற்கு முன்னதாக புசிக்க வேண்டும்.

கடைசி நாட்களானவை உலகம் அதிகமாக பாவத்திலும் தீமையிலும் மூழ்கிக் கொண்டிருக்கிற வேளையானதால் இருள் வளரத்தான் செய்யும். ஆண்டவர் திரும்ப வரும்போது, இருள் விரட்டி அடிக்கப்பட்டு, வெளிச்சம் விடியற்காலத்தை கொண்டுவரும். அக்காலத்தில், வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள அனைத்தும் சத்தியம் என்று மக்கள் உணர்ந்துக்கொள்வார்கள்.

ஆகவே, விடியற்காலம் வருவதற்கு முன்பு அதாவது நம்முடைய ஆண்டவர் திரும்ப வருவதற்கு முன்பு நாம் தேவனுடைய வார்த்தைகள் அனைத்தையும் தொடர்ந்து ஊக்கமாக போஜன–மாக்கிட வேண்டும். அவருடைய வருகையை எதிர்நோக்கி ஆண்டவரின் மணவாட்டியாக நம் ஆயத்தத்தை பூரணமாக்க வேண்டும்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் எந்தளவாய் தேவனுடைய வார்த்தையை நம்முடைய போஜனமாக்கியிருக்கிறோம் என்பது தான் நாம் இந்த உலகத்தில் எந்த தரமான வாழ்வு வாழ்கிறோம் என்பதையும் பரலோகத்தில் பரம வாசஸ்தலங்கள் மற்றும் வெகுமதிகள் எத்தரமானதாகும் என்பதையும் நிர்ணயிக்கின்றது.

ஆகவே, தேவனுடைய வார்த்தையின் ஒவ்வொரு துணுக்குகளையும் நீங்கள் போஜனமாக்கி பரலோகத்தில் மிக மகிமையான வாசஸ்தலங்களுக்குள் நுழைய வேண்டும் என ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.


**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)...” (அப். 17:25)

“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” (அப். 4:12)











## “அறிவர். ஜேராக் லீ தேவனையும் ஆண்டவரையும் சந்திப்பதற்கு தெளிவான வழியை காட்டுகிறார்”

அறிவர். மிகாயல் மொர்குலிஸ், ஸ்பிரிச்சுவல் டிப்லமசியின் தலைவர், அமெரிக்கா

கடந்த 10 ஆண்டுகளாக நான் மான்மின் மத்திய திருச்சபையுடன் மிக நெருங்கிய தொடர்பை நிர்வாகித்து ஆவிக்குரிய பரவசத்தை அனுபவித்து வருகிறேன். தேவன் நாம் நமதன்பை அவரிடம் வெளிப்படுத்துவதை விரும்புகிறார். அறிவர். லீ அவரது பிரசங்கங்கள் ஒவ்வொன்றிலும் தேவனுக்கான தனதன்பை காண்பிக்கிறார். அவைகளில் உள்ள முக்கிய குணாதிசயம் அதுவே.

அநேக போதகர்கள் தேவனைக் குறித்து பேசுகிறார்கள். மேலும் பல விசுவாசிகள் ஆண்டவருக்கு முன்பாக வர விரும்புகிறார்கள். ஆனால் பிரச்சனை என்னவென்றால் அவர்களுக்கு ஆண்டவரிடம் போகும் திசை தெரியாது. இருப்பினும் அறிவர். லீ அவர்கள்தாமே ஒரு நல்ல உதாரணத்தை ஏற்படுத்தி தேவனிடத்திற்கும் ஆண்டவரிடத்திற்கும் போகும் திசையை அறிமுகப்படுத்துகிறார்.

நான் நடத்திக்கொண்டிருக்கிற உலக பரிசுத்த மையத்தில் அறிவர். லீ அவர்களது புத்தகங்கள் வித்தியாசமான மொழிகளில் நிறைந்துள்ளது. விசேஷமாக ரஷிய மொழியில் எழுதப்பட்ட புத்தகங்கள் பல உள்ளன. இதன் காரணமாக உக்ரேன், பெலரஸ் போன்ற ரஷ்ய மொழி பேசும் தேசங்களிலிருந்து மக்கள் பலர் அங்கு வருகை தந்துள்ளனர். அறிவர். லீ அவர்களைக் குறித்தும் நாங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்துகிறோம்.

மான்மின் கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் தேவனுடைய அன்பை காண்பிக்கிறது. கொண்டாட்ட கலைநிகழ்ச்சிகளை நான் பார்த்துக் கொண்டிருந்தபோது தேவனுடைய மற்றும் பரிசுத்த ஆவியானவருடைய பிரசன்னத்தை உணர்ந்தேன். அதினால் மாத்திரமல்ல, மான்மின்மீது பரத்திலிருந்து ஊற்றப்பட்ட மகிழ்ச்சியினாலும்தான். ஹலேலூயா!

## “ஆவிக்குரிய ஆற்றல் நிறைந்த அன்பின் மண்டலம் இது”



அறிவர். ஒலேக் ஒஸ்டேரிக்கே, 2017 WCDN ரஷ்ய கருத்தரங்கின் ஒருங்கிணைப்புக் குழு தலைவர்

WCDN கருத்தரங்குகளில் பங்குபெறும்போது நான் மான்மினைக் குறித்து அறிந்துக் கொண்டேன். திருச்சபையின் 34வது ஆண்டுவிழா மிகவும் பிரம்மாண்டமாகவும் அதிசயமாகவும் இருந்தது. அது தேவனுடைய நாமத்தை உயர்த்துகிற பரலோக திருவிழா போல இருந்தது. மேலும் அது அன்பினால் நிறைந்ததாய் இருந்தது. அந்தப் பாடல்கள், நடனம், இசை அனைத்தும் மிகவும் நன்றாயிருந்தது. நான் அதை மறக்கமாட்டேன்.

நான் மூவான் மதுர தண்ணீருள்ள இடத்திற்குச் சென்றபோது, நான் தேவனுடைய அன்பை உணர்ந்தேன். கடல் உப்புத் தண்ணீர் மதுர தண்ணீராய் மாறிய அற்புத இடத்தில் நான் சேர்ந்த அக்கனம் என்னால் ஆவிக்குரிய ஆற்றலை உணர முடிந்தது. நான் தண்ணீருக்குள் என்னை முழுக்கியவுடனே நான் மிகவும் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் இருந்தேன். எனது மனைவி லுட்மிலா அவளது ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு ஆண்டவர் புன்னகைப்பதைக் கண்டாள்.

2017ல் WCDN ரஷ்ய கருத்தரங்கு செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் நடைபெறவுள்ளது. அது தேவனுக்கான மருத்துவர்களுக்கான விசுவாசிகளுக்கான திருவிழாவாக இருக்கும்.

ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு நொடியும் உண்மையாய் தேவனை நேசிக்கிற மக்களைச் சந்திப்பதில் செலவிட்டேன். மேலும், மான்மின் மத்திய திருச்சபையில் அவருடைய அன்பைப் பெற்றது எனக்கு மிகவும் விலையேறப்பெற்றதாய் இருந்தது; எனக்கு சந்தோஷம் தந்தது.

## “ எனது தேசத்தில் பல மக்களை மாற்றுவதற்கு வார்த்தைக்காகவும் வல்லமைக்காகவும் வாஞ்சையோடிருக்கிறேன்”



பிஷப் கேர்ஜெஸ் மோர்கன் போக்டார், எகிப்து பெந்தேகோஸ்தே சபைகளின் தலைவர்

ஒவ்வொரு முறையும் நான் மான்மின் மத்திய திருச்சபையை சந்திக்கும்போது நான் அறிவர். ஜேராக் லீ அவர்களின் வல்லமை முன்பைக் காட்டிலும் அதிகமானதை உணருகிறேன்.

அவர் இஸ்லாமியர்கள் அதிகம் இருக்கிற பாகிஸ்தானில் படைமுயற்சி கூட்டத்தை நடத்தினார். அவர் அநேக மக்களை அவர்களுடைய வியாதியிலிருந்து சுகமாக்கினார். அந்தக் கூட்டத்தில் அநேக மக்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்டனர். பிற்பாடு, போதகர் டேய்சிக் கில் அனுப்பப்பட்டு அறிவர். லீ அவர்கள் ஜெபித்ததான கைக்குட்டையின் மூலமாக (அப். 19:11–12) வெளிப்பட்ட எண்ணற்ற கிரியைகளால் தேவனை மகிமைப்படுத்தினார்.

அதே வகையான கிரியைகள் எகிப்திலும் நிகழ்ந்தது. அவைகள் எனது அங்கத்தினர்களை ஆவிக்குரிய மாற்றத்திற்கு நேராக வழிநடத்தி, எதிராளியாகிய பிசாசையும் சாத்தானையும் விரட்டியுள்ளன. அநேக மக்கள் திருச்சபைக்கு கடந்துவந்து தேவனுக்கு நன்றி செலுத்தினர். இஸ்லாமியர்களும்கூட வல்லமையான கிரியைகளை அனுபவித்த பின்னர் பதிவு செய்துள்ளனர். நான் அறிவர். லீ அவர்களது போதனைகளை அதிகம் கற்றறியவும் பின்பற்றவும் முயலுகிறேன். நான் பரிசுத்த சுவிசேஷத்தைப் பரப்பவும் அறிவர். லீ அவர்களது புத்தகங்களை விநியோகமும் செய்வேன். காரணம் அவரது செய்திகள் ஒருவரது வாழ்வை குணமாக்குகிறது. அது உயரியநிலை போதனையாகவும் உள்ளது.




## “முழு இருதயத்தோடு தேவனை நேசிக்கிற விசுவாசிகள் மிகுந்த அழகானவர்கள்”



**பிஷப் ஒழிமஷாய் நிக்கோலஸ் ஒமுயங்கோலி,**
**கென்யா நற்செய்தி**
**சுவிசேஷ சபைகளின் தலைவர்**

பரலோக வாசஸ்தலங்கள் ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் விசுவாசத்தின் அளவின்படி பிரிக்கப்பட்டுள்ளது என்பதை நான் கேள்விப்பட்டபொழுது நெகிழ்ந்துப்போனேன். இதைத் தவிர்த்து பரிசுத்த சுவிசேஷம் தேவனை மெய்யாக நேசிக்கக்கூடிய ஒரு உண்மை கிறிஸ்தவனாக மாறுவதற்கான வழியை எனக்குக் காண்பித்தது. என்னுடைய ஸ்தாபனத்தில் இருக்கிற 65 சபைகளின் போதகர்களிடம் இதைக் குறித்து நான் பேசினேன். அவர்களுடைய சம்மதத்துடன் மான்மின் சபையோடு இணைவதற்கு நாங்கள் தீர்மானித்தோம்.

எண்ணற்ற அளவிற்கு உபவாசமும் ஜெபமும் ஏறெடுத்து அதன்மூலம் ஜீவ வார்த்தைகளைப் பெற்றுக்கொண்ட அந்த மனிதரை நான் காணவிரும்பினேன். எனவே நான் எங்களுக்காக தேவன் புதிய கிரியைகளை செய்வார் என்னும் எதிர்பார்ப்போடு அதிகம் கற்றுக்கொள்வதற்காக மான்மின் தலைமை சபையின் 34வது ஆண்டுவிழாவிற்காக கொரியாவிற்கு வந்தேன். ஜீவனுள்ள வார்த்தையும், சுகமான மற்றும் பதிலைப் பெற்ற சாட்சிகளும் மிகவும் சிறப்பானவையாகும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, தங்களது இருதயத்திலிருந்து தேவனை நேசிக்கிற சபையின் விசுவாசிகளால் நான் தொடப்பட்டேன். ஒவ்வொரு நாள் இரவும் அவர்கள் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக ஜெபிப்பதைப் பார்ப்பது ஆச்சரியமாக இருக்கிறது. தேவனுடைய கிருபையும் ஆசீர்வாதமும் பொங்கிவழிகின்ற மான்மினோடு தொடர்ந்து ஐக்கியத்தில் இருக்க நான் விரும்புகிறேன்.

## “உலக மக்கள் இந்த அழகான கலைநிகழ்ச்சிகளை பார்க்கும்படி நாம் வழிவகுக்க வேண்டும்”



**Dr. ஆண்ட்ரே கஷிரொவ்ஸ்கி, உதவும் கரம் கூட்டமைப்பின் நிறுவனர் மற்றும் தலைவர்**

எனக்குப் பரலோகம் போன்று இருக்கிற மான்மின் தலைமை சபைக்கு வருவதை இஸ்ரேலில் அதிகமாய் எதிர்பார்த்து கொண்டிருந்தேன். மான்மினில் என் அனுபவத்தைக் குறித்து ஒரே வார்த்தையில் என்னை சொல்லச் சொன்னால் நான், “அன்பு” என்றே சொல்வேன். அங்கு பரலோகத்திற்கான ஏக்கமும் ஆசையும் தேவனுக்கான மிகுந்த வாஞ்சையும் இருக்கிறது. அவைகள் மான்மின் தலைமை சபையின் பிரதிநிதிகளாகும்.

நாம் பரிசுத்தமானவர்களாய் மாறி பரலோகத்தில் மிகுந்த மகிமையின் இடத்திற்குள் செல்ல வேண்டும் என அவர் விரும்புவதே தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் அனைத்து பிரசங்கங்களின் ஒரு எளிய மற்றும் முக்கிய செய்தியாகும். கலைநிகழ்ச்சிகள் ஆச்சரியமானதாக இருந்தன. நான் பரலோகத்தில் இருப்பதாக உணர்ந்தேன். அவை மிகவும் சிறப்பாக இருந்தன, எவ்வளவு சிறப்பு என்று என்னால் விவரிக்க முடியவில்லை. இந்த அதிசயமான கலைநிகழ்ச்சிகள் முழு உலகத்திலும் பரவிடும் என நான் விசுவாசிக்கிறேன்.

உதவும் கரம் கூட்டமைப்பானது இஸ்ரேல் தேசத்தின் 70வது ஆண்டுவிழாவை கொண்டாடும்படிக்கு ஒரு சர்வதேச நிகழ்ச்சிக்காக ஆயத்தப்பட்டுக் கொண்டு வருகிறது. அது இஸ்ரேலின் அதிபரால் நடத்தப்படுகிறது. அநேக கிறிஸ்தவர்கள் இஸ்ரேலுக்காக உதவவும் ஆசீர்வதிக்கவும் வரவிருக்கிறார்கள். நான் அறிவர். ஜேராக் லீ அவர்களை இந்த நிகழ்ச்சிக்கு வரவேற்கிறேன். மான்மினில் இருக்கிற ஒவ்வொருவரையும் நான் அதிகம் தவறவிடுகிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**திருமதி. எலீனா லிட்வீனா,**
**2017 WCDN ரஷ்ய**
**கருத்தரங்கின் நிர்வாகி**

## “என் முட்டு வீக்கத்தால் நடப்பதற்கு எனக்கு கஷ்டமாக இருந்தது, எனினும் நான் சுகமானேன்”



கடந்த மாதத்தில் என்னுடைய சம்பளத்தில் பாதியை என் மூட்டு வீக்கத்திற்கான சிகிச்சைக்காக நான் செலவிட்டேன். ஆனாலும் அது மோசமடைந்தது, என்னால் சரியாக நடக்கவும் முடியவில்லை.

நான் கொரியாவில் உள்ள மான்மின் தலைமை சபைக்கு செல்ல வேண்டும் என்று அதிகமாய் விரும்பினேன். ஆகவே நான் கண்ணீரோடு ஜெபித்தேன். நிஜத்தில், நான் வரவே இயலாத நிலையாக இருந்தது. எனினும் திரளான மருந்துகளோடு நான் கொரியாவிற்கு வந்தேன்.

அக்டோபர் 7, 2016 அன்று வெள்ளிக்கிழமை முழு இரவு ஆராதனைக்கு முன்பு நான் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்றேன். ஆச்சரிய விதமாக, என் கால்கள் இலகுவடைந்ததை உணர்நதேன்; அறிகுறிகளும் தேற ஆரம்பித்ததை உணர்ந்தேன். அடுத்தநாளில், எனக்கு வலியே இல்லை, வீக்கமும் குறைந்தது. நான் மிகுந்த சந்தோஷத்தை அடைந்தேன்.

சனிக்கிழமை அதாவது அக்டோபர் 8 அன்று, நாங்கள் சீயோலுக்குள் சுற்றுலா சென்றோம். நான் மற்ற மக்களைப் போல படிகளில் ஏறி இறங்கி நடந்தேன்; ஆனால் எனக்கு முற்றிலும் வலியே இல்லை. என்னை சுகமாக்கிய ஆண்டவருக்கும், எனக்காக ஜெபித்த தலைமை போதகருக்கும் நான் நன்றிகளை செலுத்துகிறேன்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com